புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# அகநானூற்றில்ஆம்பல் மலர்

**வெ. காமினி**
பகுதிநேரமுனைவர்பட்டஆய்வாளர்
தூயநெஞ்சக்கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் – 635 601. திருப்பத்தூர் மாவட்டம்

*முன்னுரை*

*சங்ககால இலக்கியம் என்பது பண்டத்தமிழரின் வாழ்க்கையோடு இணைந்த வாழ்க்கை முறையாகும். இது ஒரு நீர் நிலைத் தாவரமாகும். ஆம்பலானது வளர்ப்புத் தாவரமாகவும், காட்டுத் தாவரமாகவும் உள்ளது. இதன் வேர்த்தண்டுக் கிழங்கிலிருந்து தோன்றும். இலை முட்டை வடிவிலும், இலையின் அடியில் நீண்ட பிளவு ஒன்றுண்டு. இலையின் நடுவில் இலைக்காம்பு இணைந்திருக்கும். இந்த மலர்கள் மிகவும் பெரியவை. இது செம்மை, வெண்மை என்ற இரு நிறங்களில் காணப்படுகிறது .அத்தகைய சிறப்பு வாய்ந்த நீர்நிலைத்தாவரமான ஆம்பல் மலரை பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் காணலாம்.*

*வளரிடம்*

*ஆம்பல் மருத நிலப் பொய்கையிலும், பிற நீர் நிலைகளிலும் வளரும் தன்மை உடையது.*

*ஆங்கிலப்பெயர்*

*Nymphaea Lotus*

*அமைப்பு*

*ஆம்பல் இரவில் மலர்ந்து பகலில் கூம்பும். இதன் தண்டுகளில் துளைகள் இருக்கும் . இதில் காற்றை நிரம்பி வைப்பதால் இலைத் தண்டு நீருக்கு மேலேயும், பூக்கள் நீருக்கு மேலே மிதக்கும் இயல்பைக் கொண்டது.*

*வேறு பெயர்*

*ஆம்பல், குமுதம், கைரவம், அல்லி*

*மருத்துவ குணம்*

*“வெள்ளை ஆம்பல் பூவை 1 கிலோ எடுத்து ஊற வைத்து வாலையில் இட்டு திராவகம் இறக்கி காலை, மாலை ஒரு 35மி.லி. கொடுத்து வர இரத்தப் பிரமேகம், நீர் தாரை இரணம், வெகு மூத்திர ரோகம், தாகம், உட்சூடு தீரும் இதனுடன் ஆவாரம் பூ சேர்த்து .உபயோகப்படுத்த மிகுந்த பயனளிக்கும் என்பதை கண்ணுசாமி பிள்ளை நூலில் கூறப்படுகிறது.”[1]*

*பெண்கள் ஆம்பல் மாலை அணிதல்*

*ஐயை என்பாள் மணிகள் உள்ளிடப்பட்ட சிலம்பினையும், ஆம்பல் மலரால் ஆன அழகிய மாலையினையும், வாள் அரத்தினால் செய்யப்பட்ட வளையல்களால் பொலிவு பெற்ற முன்கையையுடையவள் என்பதை,*

*“அரிபெய் சிலம்பி னாம்பவந் தொடலை*
*ஆரம்போ ழவ்வளைப் பொலிந்த முன்கை”[2]*

*இந்த பாடலின் மூலம் ஆம்பல் மலரால் ஆன மாலையை அணியும் வழக்கம் இருந்ததைப் பரணர் எடுத்துரைக்கிறார்ஆம்பல் இலையை தலையில் அணிதல் .*

*வயலில் பூத்த ஆம்பல் மலரோடு கூடிய பசிய தழையைத் தலைவியும், தலைவனும் தலையில் சூடும் பழக்கம் உள்ளது என்பதை,*

*“கழனி ஆம்பல் முழுநெறிப் பைந்தழை*

காயா ஞாயிற் றாகத் தலைப்பப்'' [3]

இதன் மூலம் சங்க காலத்தில் ஆண்களும், பெண்களும் ஆம்பல் மலரையும், தழையையும் அணியும் பழக்கம் இருந்ததை அறிய முடிகிறது தழை ஆடை அணிதல்.

வயலைக் கொடியுடன் ஆம்பல் இலையால் ஆன தழையாடையை விழாவில் உடுத்திக் கொள்வர் என்பதை,

''மனைநகு வயலை மரன்இவர் கொழுங்கொடி
ஆரிமலர் ஆம்பலொடு ஆர்தழை தைஇ'' [4]

இப்பாடலின் மூலம் ஆம்பல் இலையாலான தழையாடையை அணிந்து பரத்தையர் கூத்தாடும் வழக்கம் கொண்டிருந்தனர் என அறியலாம்.

ஆம்பல் மலர் உணவு

மூவந்தர் பாரியை முற்றுகையிட உணவு இன்மையால் பாரியின் வீரர்கள் வயலில் விளைந்த நெல்லை கபிலர் வளர்த்த கிளிகள் மூலம் பெற்று அதனுடன் ஆம்பல் மலரையும் கட்டி அவியல் செய்து உண்டனர் என்பதை,

''செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதர் கொண்டு
துடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டவயிற் பிழையா'' [5]

இப்பாடலடிகள் மூலம் ஆம்பல் மலரை உணவாக உண்ணும் பழக்கம் இருந்ததை மதுரை நக்கீரனார் தெளிவுபடுத்துகிறார்.

ஆம்பல் இலையில் உணவு உண்ணுதல்

ஆம்பல் இலையில் பாணர் மகளிர் புளிப்பு, இனிப்பு கலந்த புளியங்கறியை சோற்றுடன் இட்டு தன் கணவன்மார்களுக்கு உண்பிப்பர்என்பதை,

''ஆம்பல் அகல் இலை, அமலை வெஞ்சோறு
தீம்புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து'' [6]

இப்பாடலின் மூலம் பண்டைய காலத்தில் ஆம்பல் இலை உணவு உண்ண பயன்படுத்தினர் என்பதை பரணர்பாடலில் விளக்குகிறார்.

ஆம்பல் தண்டில் வளையல் அணிதல்

ஆம்பல் தண்டினால் வளையல்கள் செய்து மகளிர் அணியும் பழக்கம் இருந்தது என்பதனை,

''ஆம்பல் வள்ளித் தொடிக் கை மகளிர்'' [7]

எனும் பாடலடிகள் பறைசாற்றுகின்றன.

ஆம்பல் தண்டில் துளை

நீரில் வளர்கின்ற ஆம்பல் தண்டின் நடுவே துளையுடையதுஆம்பல் தண்டில் நார் . உரித்தாற் போன்று பசலை படர்ந்தது என்பதை,

''நீர் வளர் ஆம்பல் தூம் புடைத் திரள் கால்'' [8]

இந்த பாடலடிகள் மூலம் ஆம்பல் தண்டின் நடுவே துளையுடையது எனப் பரணர் எடுத்தியம்புகிறார்.

ஆம்பல் குழலினால் இசை

தெளிவான இசையை ஆம்பல் குழல் வெளிப்படுத்துகிறது என்பதை,

''ஆம்பல் அம் தீங்குழல் தெள்விளி பயிற்ற'' [9]

இப் பாடலடிகள் வாயிலாக கபிலர் தெளிவுபடுத்துகிறார்.

ஆம்பல் இரவில் பூப்பது பற்றிய பதிவுகள்

''மதிநோக்கி மலர்வீத்த ஆம்பல் வான்மலர்'' [10]

என்ற பாடலின் மூலம் நிலவை நோக்கி ஆம்பல் மலர்கிறது என்பதை அறிய முடிகிறது.

ஆம்பல் பெயரில் எண்கள்

சேரலாதன் பகைவரின் காவல் மரத்தை வெட்டினான் இமயத்தில் .விற்பொறியைப் பொறித்தான் ஆம்பல் என்னும் பேரெண்ணிக் கையில் உள்ள பகைவர் பணிந்து அளித்த பொன்னால் செய்த பாவையினையும், வயிரத்தையும் மரந்தை என்னும் ஊரில் தன் மனையில் நிரப்பி வைத்தான் என்பதை,

''வலம்படு முரசில் சேரலாதன்
முந்நீர் ஒட்டிக் கடம்பறுத் தியமத்து

-------------------------------------------

-------------------------------------------

பொன் செய் பாவை வயிரமொடு ஆம்பல்"[11]

எனும் பாடலடிகள் வாயிலாக ஆம்பல் என்னும் பேரெண்ணிக்கைகள் மன்னர்களால் பயன்படுத்தப்பட்டது.என புலவர் மாமூலனார் எடுத்துரைக்கிறார் .

ஊழிகளின் தோற்றத்தில் ஆம்பல்

பரிபாடலில் திருமாலின் பெருமையைவெளிப்படுத்தும்போது நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் என எண்களால் குறிக்கப்படுகிறதுஎண்களின் மிகுதியை .ச் சுட்டும் பெயர்களை இலக்கியங்களில் காணமுடிகிறதுநெய்தல் என்பது குறைவான . வெள்ளம் அ எண்ணாகவும்திக எண்ணாகவும் கருதமுடிகிறது என்பதை,

"உள்ளீடு ஆகிய இரு நிலத்து ஊழியும்
நெய்தலும், குவளையும், ஆம்பலும், சங்கமும்,
மைஇல் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய் குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை"[12]

இப்பாடலடிகள் மூலம் மலர்கள் பெயரில் எண்கள் உள்ளதை அறிய முடிகிறது .

முடிவுரை

ஆம்பல் மருத நில பொய்கையில் வளரக்கூடியது. இதன் மலரை பெண்கள் மாலையாக அணிந்தும், இலையை தலையில் அணிந்தும், பரத்தையர்கள் தழையாடையாக விழாவில் அணிவதையும், மலர்கள் உணவாகவும், சங்ககால மக்கள் ஆம்பல் இலையில் உணவு உண்ணும் வழக்கமும், இதன் தண்டினால் மகளிர்கள் வளையல் செய்து அணிந்ததையும், ஆம்பல் மலர் மகளிர் மேனிக்கும் உவமையாக கூறப்பட்டுள்ள செய்தியை இந்த ஆய்வின் மூலம்அறிய முடிகிறது.

சான்றெண் விளக்கம்


1. கண்ணுசாமிப்பிள்ளை. ச., (உ.ஆ) சித்தவைத்தியபதார்த்தகுணவிளக்கம், பக். 40 – 41
2. வேங்கடசாமிநாட்டார். ந.மு., (உ.ஆ) அகநானூறுமூலமும்உரையும், பா. 6 : 1 -2, ப. 25
3. மேலது. பா.156 : 9 – 10, ப.87
4. மேலது. பா.176 : 13 – 14, ப.130
5. மேலது. பா.178 : 17 – 19, ப.204
6. மேலது. பா.195 : 5 – 6, ப.180
7. மேலது. பா. 63 : 12, ப.167
8. பாலசுப்பிரமணியன்.கு.வெ., (உ.ஆ) நற்றிணை மூலமும் உரையும், பா.6 : 1 – 2, ப. 11
9. நாகராசன். வி., (உ.ஆ) குறிஞ்சிப்பாட்டு மூலமும் உரையும், பா.222, ப. 234
10. விசுவநாதன். அ., (உ.ஆ) கலித்தொகை மூலமும் உரையும், பா.72 : 6, ப. 306
11. வேங்கடசாமிநாட்டார். ந.மு., (உ.ஆ) அகநானூறு மூலமும் உரையும், பா. 127 : 3 -8, ப. 21
12. சுப்பிரமணியன்.பெ., (உ.ஆ) பரிபாடல் மூலமும் உரையும், பா. 2 : 12 – 15, ப. 19


********* ********* ********** ********* ********* ********** ********** **********